# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 341/மா/2025

நாள்: 03.09.2026

B. சரவணன்
சென்னை–600 017 --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம்–8
பெருநகர சென்னை மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை–600 017, தியாகராய நகர், புது தெரு, கதவு எண் 1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. சரவணன் என்பவரின் 14.07.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.07.2025 அன்று பெறப்பட்டு 341/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 017, தியாகராய நகர், புது தெரு, கதவு எண் 1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. சரவணன் என்பவர் தனது 14.07.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

“மேற்கண்ட முகவரியில் வசிக்கிறேன். பொது மக்களுக்கான பொது பணிகளை சட்டரீதியாக செய்து வருகிறேன். மேலும் நான் தெரிவிப்பது சென்னை மாநகராட்சி, புல்லா அவென்யு, ஷெனாய் நகர், சென்னை–30, மண்டல அலுவலர், மண்டலம் 5 – கடந்த 20.05.2025, 21.05.2025 அன்று வார்டு–106 A.E. பிரபு (செல். நெ.9445190406) இவர்களிடம் சட்ட விரோதமாக கட்டப்பட்டுள்ள கட்டிடம் கதவு எண் 229/201, பெரியார் பாதை, சூளை மேடு, சென்னை–94 (A. RATHANLAL CHOUDHARY) காமதேனு ஜுவல்லர்ஸ் என்கிற முகவரியில் CMDA மாநகராட்சி அனுமதியின்படி கட்டிடம் கட்டப்படாமல் சட்டத்துக்கு புறம்பாக சட்ட விரோதமாகவும் நடைபாதை சாலை ஆக்கிரமித்து Steps and Ramp, திண்ணைகள், இரும்பு கைபிடிகள் என தன் சுய

நலத்துக்காக மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதைகளை ஆக்கிரமித்து செய்துள்ளார். இதனை சென்னை மாநகராட்சி அதிகாரிகள் நேரடியாக ஆய்வு செய்து கூடுதலாக ஆக்கிரமித்து கட்டிய கட்டிடத்தினை எத்தனை சதுரடிகள் அகலம், நீளம் உயரம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட கட்டுமானங்கள் கட்டப்பட்டுள்ளது என நேரடியாக ஆய்வு செய்து அறிக்கை அளித்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புகார் அளித்தேன். இதுநாள் வரை 07.07.2025 வரை எவ்வித நடவடிக்கையும் இல்லை – பதிலும் இல்லை. போன் செய்தால் A.E. பிரபு அவர்கள் செல்போனை எடுப்பது இல்லை. நேரில் சென்று A.E. அலுவலகத்தில் கேட்டபோது செல்போனில் வீடியோ பார்த்துக் கொண்டு செல்போனில் வாழ்ந்துக் கொண்டும் அதிக சத்தங்களுடன் வீடியோ பார்த்தபடி சரி போ நான் பார்த்துக் கொள்கிறேன் என்று பதில் அளித்தார். அலட்சியமாகவும், மெத்தனப் போக்குடன் ஆக்கிரமிப்பாளருக்கு உடந்தையாக இருந்து கொண்டு நடவடிக்கை எடுக்க மறுத்து, கடமையை செய்ய தவறிய அதிகாரி மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனால் நான் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளேன். எனவே சட்டப்படி அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து எனது புகார் மனு மீது காலம் தாழ்த்தாமல் நடவடிக்கை எடுக்க உத்திரவிட கோரி மேல்முறையீடு புகார் அளிக்கப்படுகிறது.''

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 06.10.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 04.06.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 29.04.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரர் 04.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"சென்னை மாநகராட்சி, சென்னை–30, புல்லா அவென்யு, ஷெனாய் நகர், மண்டல அலுவலர், மண்டலம் 8 ல் சென்னை–94, சூளைமேடு, பெரியார் பாதை, கதவு எண் 229/201–ல் (A.RATHANLAL CHOUDHARY) காமதேனு ஜுவல்லர்ஸ் கட்டிடம் நடைபாதை சாலை ஆக்கிரமித்து Steps and Ramp, இரும்பு கைபிடிகள் அமைத்துள்ளார். இது குறித்து ஆய்வு செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புகார் அளித்தேன்.

தற்போது மண்டலம் 8ன் உதவிப்பொறியாளர் மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்றி விட்டதாக தெரிவித்துள்ள நிலையில் எனது மனு மீது மேல் நடவடிக்கை தேவையில்லை என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''.

5. இரண்டாம் எதிர்மனுதாரர் 04.06.2026 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

6. மேற்கொண்ட பொருண்மை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் தொடர்புடையது என்பதால், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் மண்டல அலுவலரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 25.06.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 09.06.2026 நாளிட்ட அழைப்பாணை எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்டு, மனுதாரருக்கு நகல் அனுப்பப்பட்டது.

7. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் உதவிப் பொறியாளர் 25.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“சென்னை மாநகராட்சி, சென்னை–30, புல்லா அவென்யு, ஷெனாய் நகர், மண்டல அலுவலர், மண்டலம் 8–ல் சென்னை–94, சூளைமேடு, பெரியார் பாதை, கதவு எண். 229/201–ல் (A.RATHANLAL CHOUDHARY) காமதேனு ஜுவல்லர்ஸ் கட்டிடம் நடைபாதை சாலை ஆக்கிரமித்து Steps and Ramp, இரும்பு கைபிடிகள் அமைக்கப்பட்டுள்ளது என்ற புகார் தொடர்பாக அவ்விடம் கள ஆய்வில் ஆக்கிரமிப்பு கண்டறியப்பட்டு அவ்ஆக்கிரமிப்புகள் 08.07.2025 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8ன் அலுவலகத்தால் அகற்றப்பட்டன என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.”.

8. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8–ற்கு உட்பட்ட சென்னை–94, சூளைமேடு, பெரியார் பாதை, கதவு எண் 229/201–ல் (A.RATHANLAL CHOUDHARY) காமதேனு ஜுவல்லர்ஸ் கட்டிடமானது நடைபாதை சாலையை ஆக்கிரமித்து Steps and Ramp, இரும்பு கைப்பிடிகள் அமைக்கப்பட்டுள்ளது குறித்து ஆய்வு செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புகார் அளிக்கப்பட்டது என்பதும், ஆனால், மண்டலம் 8ன் உதவிப்பொறியாளர் மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்றி விட்டதாக தெரிவித்துள்ள நிலையில் தனது மனு மீது மேல் நடவடிக்கை தேவையில்லை என தெரிவிக்கப்பட்டதும் மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் தன்னுடைய மனுவில் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8–ற்கு உட்பட்ட சென்னை–94, சூளைமேடு, பெரியார் பாதை, கதவு எண் 229/201–ல் (A.RATHANLAL CHOUDHARY) காமதேனு ஜுவல்லர்ஸ் கட்டிடமானது நடைபாதை சாலையை ஆக்கிரமித்து Steps and Ramp, இரும்பு கைப்பிடிகள் அமைக்கப்பட்டுள்ளதை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8ன் அலுவலகத்தால் அகற்றப்பட்டன என்பது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் உதவி பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள புகாரான பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8–ற்கு உட்பட்ட சென்னை–94, சூளைமேடு, பெரியார் பாதை, கதவு எண் 229/201–ல் (A.RATHANLAL CHOUDHARY) காமதேனு ஜுவல்லர்ஸ் கட்டிடத்திற்கு முன்பு உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதையில் Steps and Ramp, இரும்பு கைப்பிடிகள் அமைக்கப்பட்டு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதை, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8ன் அலுவலகத்தால் அகற்றப்பட்டன என்பதை மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் உதவிப் பொறியாளர் ஆகியோர் தங்களுடைய வாக்குமூலத்தில் தெரிவித்து இருந்தாலும், அவ்விடத்தை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் செயற் பொறியாளர் கள ஆய்வு செய்து, ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுள்ளதா என்பது குறித்து தனது அறிக்கையை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் மண்டல

அலுவலருக்கு சமர்ப்பிக்க அறிவுறுத்துமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. B. சரவணன்,
கதவு எண் 1, புது தெரு,
தியாகராய நகர்,
சென்னை–600 017.

(2) ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 8,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 36B, K. புல்லா அவின்யூ,
ஷெனாய் நகர்,
சென்னை–600 030.

(4) உரிமையாளர், காமதேனு ஜீவல்லர்ஸ்,
எண் 229/201, பெரியார் பாதை,
சூளைமேடு,
சென்னை–600 091.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

நகல் :
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

15/9/26
செயலாளர்.

(முத்திரை: தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை–600 032)